
# போர் வாள்


...கள் : காஞ்சி. மணிமொழியார்
இளஞ்செழியன், B. A. (Hons.)

திராவிடர் வார வெளியீடு.

தனி இதழ் அணா 1½
ஆண்டுத் தொகை ரூ. 5

1 | சென்னை 13—9—47 சனிக்கிழமை | வீச்சு 5


திராவிடர்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி வாடுகிறார்கள். என்றாலும் 10,000 பஞ்சாபிகள் வருகிறார்கள் அகதிகளாக. அவர்களுக்கு உணவும் உடையும் ஒதுக்கப்பட்டிருக்கிறது அரசாங்கத்தினரால். ஆனால் திராவிடர்களுக்கு———?

## திராவிட நாடு பிரிவினை மாநாடு

### கடலூர் 14—9—47 ஞாயிறு

| | | | | |
|---|---|---|---|---|
| 8-30 | இரயிலடியிலிருந்து ஊர்வலம் | மாலை | 2- | திராவிடநாடு படத்திறப்பு:— P. பாலசுப்பிரமணியம். |
| 9- | கொடியேற்றுதல் :— இந்திராணி பாலசுப்பிரமணியம் | ,, | 2-30 | பெரியார் படத்திறப்பு :— திரு. வி. க. |
| 9-15 | திறப்புவிழா :— Dr. கிருஷ்ணசாமி | ,, | 3-30 | செல்வம்படத்திறப்பு :— T.A.V.நாதன். |
| 9-45 | வரவேற்பு: V.K.S.சண்முகசுந்தரம் | ,, | 4- | தாலமுத்து நடராசன் படத்திறப்பு:— K. V. அழகர்சாமி |
| 10-15 | தலைவர் முன்னுரை: எஸ்.முத்தையா | | | |
| 10-45 | பெரியார் சொற்பொழிவு | ,, | 4-30 | தீர்மானங்கள். |

**அகதிகளாக வருவது ஆள்பவராக மாறுதற்கா?**

# எல்லை இல்லை!

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" என்பது தொல்காப்பியப் பாயிரம், தமிழகத்தின் எல்லை வடக்கே வேங்கடம். தெற்கே குமரிமுனை. வரலாறு, மொழி, மக்கள் தொகை, வாழ்க்கைவழி, பண்பாடு, பழக்க வழக்கம் முதலிய எந்த அளவு கோலைக் கொண்டு அளந்து பார்ப்பதாயினும் தமிழ்நாட்டின் எல்லை இதுவாகத்தான் இருக்கமுடியும். எனவே சென்னை எவருடையது என்ற பிரச்சினைக்கே இடமில்லை—அது தமிழருடையது தான். நிச்சயம் தமிழருடையது தான். ஆனால் நம் ஆந்திர நண்பர்களில் ஒரு சாரார் சென்னையில் ஒரு பகுதி தங்களுடையது என்று வாதாடுகின்றனர். இன்னொரு சாரார், பகுதிமட்டுமல்ல—சென்னை முழுவதுமே தங்கள் தரணியில் இணைக்கப்பட வேண்டும் என்று முழங்குகின்றனர். மற்றுமொரு சாரார், சென்னை மட்டுமல்ல செங்கல்பட்டு வடார்க்காடு சேலம் மாவட்டங்களிலும் சிற்சில பகுதிகள் எங்களுக்குச் சொந்தம் என்று வல்லடி வழக்குச் செய்கின்றனர். ஏதேது! ஆந்திரர்கள் ஆசைக்கோர் எல்லை இல்லை போலிருக்கிறது!.........தமிழர்களே! காலம் கடவா முன்னர் விழித்தெழுந்து உங்கள் உரிமையை நிலை நாட்டிக் கொள்ளுங்கள். "எமது இலட்சியம் தமிழ் தெலுங்கு மலையாள கன்னட அரசுகளை உள்ளடக்கிய திராவிடக் கூட்டரசு அமைப்பதே. ஆனால் அதற்காகத் தமிழ் நிலத்தில் ஓர் அங்குலத்தையும் யாம் விட்டுக்கொடுக்க மாட்டோம்" என்பதை அழுத்தந் திருத்தமாகச் சொல்லுங்கள். அதைச் சர்வகட்சி முன்னணி அமைத்துச் சொல்லுங்கள். எத்தகைய தயவு தாட்சண்யத்திற்கும் உட்படாது சொல்லுங்கள்.

—


மா. இளஞ்செழியன் B. A. (Hons.) தீட்டியது!

★

பாசறையின் புது வெளியீடு!

## தமிழன் தொடுத்த போர்!

★

1937—40-ம் ஆண்டுகளில் தமிழ் நாட்டையே அதிர்ந்தெழச்செய்த **இந்தி எதிர்ப்புப் போராட்டம்** நிகழ்ந்த வகையை உயிரோட்டமுள்ள நடையில் எடுத்துக் கூறும் உணர்ச்சிச் சித்திரம் இந் நூல்.

★

படைத் தளபதிகளைப்பற்றிய பேனுச் சித்திரங்கள்! ஏராளமான நிகழ்ச்சிக் குறிப்புகள்—தலைவர்களின் வீர உரைகள் இவ்வளவும் உண்டு.

220 பக்கங்கள்! விலை ரு. 1-12-0

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு, சென்னை-1.


## இஸ்லாமியர் உலகில் திராவிட முரசு

சென்னை மாகாண த்தமிழ் மு
லிம் சங்க நிர்வாகக் கூட்
சென்னையில் **7-9-47**-ல் **உயர்**
**பாவலர்** S. S. **அப்துல் காதர்** அ
கள் தலைமையில் கூடி இம்மா
ணத் தமிழ் முஸ்லிம்கள் அனை
ரும் திராவிட நாடு பிரிவினை இ
கங்களிலும் **14-9-1947** ஞாயிற்
கிழமை கடலூரில் நடக்க விருக்
திராவிடநாடு பிரிவினை மா
மாநாட்டிலும் கலந்து முக்கிய
கெடுத்துக் கொள்ள வேண்
மென்ற தீர்மானம் ஏகமன
நிறைவேற்றப்பட்டது.

## வாலிப வீரர்களுக்கு

ஒவ்வொரு மனிதனும் ரா
சர் போலவோ, சர் இராமச
போலவோ, சர் ஆர். கே. ச
முகம் போலவோ வரவேண்
என்று கருதுவதைவிட அ
வது பெரிய செல்வவான்கள
வும் பதவியாளராகவும்
வேண்டும் என்று கருதுவ
விட, நல்ல தொண்டனாக
தாழ்த்தப்பட்ட, கொடு
செய்யப்பட்ட மக்களுக்கு
தலை அளிப்பவனாக—அவ
ளைச் செல்வர்களாகவும் பத
யாளராகவும் ஆக்குபவர்கள
இருப்பதனால் பெருமை இல்
மல் போகாது. முன்சொன்ன
களால் ஏற்படும் நன்மையைவி
பின் சொன்னவர்களால் ஏ
டும் நன்மை குறைந்துபோகா
ஆதலால் வாலிபர்களுக்
செல்வத்திலும் பதவியிலு
கண்ணும் கருத்தும் இருக்
கூடாது என்றும், பொ
தொண்டுக்கு இறங்கி தொண்
னாகவே ஆக ஆசைப்பட வே
டும் என்றும், நம சமுதாயத்
குத் தொண்டாற்ற செல்வமு
பதவியும் கருதாத தொண்
கள் அநேகர் வேண்டி இருக்
றார்கள் என்றும் தெரிவித்
கொள்கிறேன்.

—பெரியார் ஈ. வெ. ரா.

கதை.

# கத்திக் குத்து

[நா. அறிவழகன்]

ண்ணை முதலாளி பஞ்சநாத ரின் ப..[illegible]யாள் தான் பாண்டி. அவன் பிறவியி யே பணியாள் வேலை பார்த் சாகப் பிறந்தவன். அவன் டுமல்ல; அந்த வாரிசிலே ரும்பாலோரும் அப்படித் ன்!.

ாலை ஆறு மணிக்கு வேலைக் போனால், மாலை ஆறு ரிக்குத்தான் அவன் சொந்த டைப் பார்ப்பான். அது ரக்கும் உழைத்து உழைத்து த்துப்போய், அலுக்கை தீர ரைப்புட்டி கள்ளை அருந்தி டுப் படுத்தால், காலை ஐந்து ரிக்குத்தான் நாட்டைக் கண் த்துப் பார்ப்பான். இது ாதுவாக உழைப்பாளிகளின் !.

ம்பிரதாய முறைப்படி திரு ணம் செய்துகொண்டான். ன் குணத்திற்கு ஏற்ற றையில் தான் அவளும் த்தாள்.

அவள்—கருப்பாயி.

ருப்பாயிக்குக் காலம் முடிந்து டையில் போனபொழுது தாயி, தவழும் நிலை—செங் ரப் பருவத்தில் இருந்தாள்.

மருதாயி சிறுவீடு கட்டி, ாறு சமைத்து விளையாடும் —சிற்றில் பருவத்தை டைந்தாள்.

ஒரு நாள்—

ாள் பல ஆயின.

ருதாயியும், மாயாண்டியும் ார் ஐந்தரை மணியளவில் சி குடித்துவிட்டுப் பண்ணை லைக்குப் போனார்கள்.

பழக்கப்படி மாயாண்டி வேலை ஈடுபட்டான்.

மருதாயி—?

மருதாயி மண்ணைக் கூட்டி, அதிலே என்னென்னவோ வெல்லாம் அமைத்து விளையாடி னாள். விளையாட்டு அலுப்பி னால் அயர்ந்து உறங்கிவிட்டாள். உறங்கியவள் மாலை ஐந்து மணிக்கு எழுந்தாள். எழுந்த இடத்திலே அழுகையும் எழும் பிவிட்டது. காலையில் கஞ்சி குடித்தவள் தானே! மாலையில் பசி அதிகரித்து விட்டது.

"வயிறு பசிக்குது. வாப்பா! வீட்டுக்குப் போகலாம்" இது பசியால் வாடும் மருதாயியின் அழைப்பு!

"இன்னுங் கொஞ்ச நேரத் தில் வீட்டுக்குப் போகலாம். அதோ எசமான் வீட்டுப் பிள்ளை கள் விளையாடுது. அதுக கூடப் போய் விளையாடு, போறபோது கூட்டிப் போறேன்". மருதாயி யின் அழைப்புக்கு மாயாண்டி தந்த பதில்!

* * *

"வனஜா! வாயேண்டி விளை யாடலாம்!"

"காந்தா! என்ன விளையாட்டு விளையாடப் போறடி!"

"ஓடி விளையாடலாம்"

"அது எப்படி—"

"நீங்கள்ளாம் கல்லுமேலே நில்லுங்கடி! கல்லெவிட்டு மாறி மறுகல்லுக்குப் போற பொழுது தான் நான் உங்களைத் தொடு வேன். தொட்டுட்டா தொட் டவா திரும்ப ஓடித் தொட வேண்டும்."

"சரி, வாங்கடி விளையாட லாம்".

விளையாட்டு வேகத்திலே ஓடிய பிள்ளைகளுடன் மருதாயியும், எஜமான் வீட்டுக்குள் உள்ள கல்லில் போய் நின்றாள்.

எஜமான் கண்ணில் மருதாயி பட்டாள்.

"ஏ! பறப்புள்ளே! வீடு வரைக்கும் நுழைஞ்சிட்டியே! என்ன துணிச்சல்! சீச்சி! போ! கழுதை!" என்று கூறியவாறே, தடிகொண்டு நாலைந்து அடியும் கொடுத்தார்.

பசியால் வாடும் மருதாயிக்கு ஐயர் தந்த உணவு இது!

மருதாயி 'விர் விர்' என்று அழுதுகொண்டே அப்பாவிடம் ஓடிவந்தாள். அவள் அழுத கண்ணீரை அளந்திருந்தால் ஒரு செம்புக்குக் குறையாமல் இருக் கும்.

மருதாயியின் அழுகைக்கு இரங்கிய அப்பா. "என்ன—?" என்று கேட்டார்.

மருதாயிக்குப் பேச முடிய வில்லை மேலும் மேலும் தேம் பித் தேம்பி அழுதாள்.

"என்னம்மா! கண்ணு! ஏனழுகிறாய்—?"

"எ....ச......மா....ன்...அ.... டிச்....சாருப்பா!"

எஜமான் வீட்டுப் பிள்ளை— சின்ன எஜமானி விபரத்தைச் சொன்னாள்:

"பறப் புள்ளே இது! ஆத் துக்குள்ளே நுழைஞ்சிடுச்சு! அப்பா அடிச்சு வெளியே விரட் டிட்டாரு"

"நீ ஏம்மா உள்ளே போனே? அவுங்க உசந்தசாதி. நம்ம பறச் சாதி. நம்ம அவுங்க வூட்டுக் குள்ளே போகக் கூடாதம்மா! அதனாலேதான் அவர் அடிச் சிருக்காரு, சரி, அழுவாதே அம்மா!" என்று மாயாண்டி பரிவுடன் ம[illegible]தாயியைத் தேற்றி னான்.

மருதாயி அறிவாளா இதனை. பாவாடை கட்டிய பெண்! விளை யாட்டுப் பிள்ளை!

மணி அடித்தது. வேலை

முடிந்தது. இருவரும் வீடு ஏகினர்.

*  *  *

அன்று பாவாடைக்காரியா யிருந்த மருதாயி, இன்று பார்ப்பவர் மனதைக் கவரும் சேலைக்காரியாகிவிட்டாள்.

அப்பாவுக்குக் கஞ்சிக் குடத்தைக் கக்கத்தில் ஏந்தி, ஆடி அசைந்து, நெற்றியிலே செம்பொட்டு இட்டு, மேனி மினுக்கி, நீள் சாலை யோரத்திலே நெடுக நடந்து பண்ணையை நோக்கி வந்தாள்.

இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னிருந்த கவிஞர்கள், சாலையோரத்தில வருகின்ற மருதாயியைக் கண்டிருந்தால் அன்ன நடை, மின்னலிடை, விற் புருவம், வேல்விழி, கற்றைக் குழல், கமுகங் கழுத்து, கொடி எனத் துவளும் உடல்—என்றெல்லாம் கவி புனைந்திருப்பர்.

உதடு வயிரத்தின் கிழிசல், கன்னம் கண்ணாடி—இப்படியாக அடுக்கி அடுக்கிப் புதுப்புது உவமைகளை எழுதித் தள்ளுவர், இன்றைய கவிஞர்கள்.

அனைவருக்கும் மருதாயி அழகிதான்!

*  *  *

மாயாண்டிக்குக் கஞ்சி கொண்டு வந்து கொடுத்தாள்.

ஐயா கண்ணிலும் அகப்பட்டு விட்டாள்.

"மருதாயி! இந்தா! இங்கே வா!"

"என்ன எசமான்—?"

"ஒன்றுமில்லே. மாயாண்டி வேலையை முடிச்சிட்டு வீட்டுக்குப் போனபிறகு உனக்கு இங்கே கொஞ்சம் வேலையிருக்கு அதனாலே நீ இங்கேயே தங்கியிரு."

"சரிங்க, எசமான்!"

*  *  *

அன்று இரவு—

"மருதாயி! அது அத்தோடே கிடக்கட்டும். இங்கே வாயேன்!"—குழைவாகக் கூறியவாறே கையைப் பிடித்து இழுத்தார்.

மருதாயியின் மனம் குமுறியது. அவனை எரித்துவிட வேண்டுமென்று எண்ணினாள். கற்பை இழக்க விரும்பாமல், கரு நாகமெனச் சீறியது அவள் உள்ளம். ஆனால், அந்த ஏழைப் பெண்ணால் என்ன செய்ய முடியும்? மறுத்தால் தந்தையின் வேலைக்கு மரணம் ஏற்படுமே என்று ஒரு பக்கம் கவலை. இருந்த போதிலும், "எசமான்! எசமான்! விட்டுடுங்க! நான் பறப் புள்ளேங்க! ஒங்க சாதிக்கு அடுக்காதுங்க!" என்று கூறிப் பார்த்தாள்.

"சாதியாவது, கீதியாவது. அதெல்லாம் இதற்கில்லே"

"என்ன எசமான்! அன்றைக்கு அறியாப் பருவத்தில் தெரியாத்தனமாக உங்கள் வீட்டுக்குள் நுழைந்ததற்கு இந்தக் கையும், வாயுந்தானே அடிக்கவும், வையவும் ஒன்றுகூடிச் செய்தன. இப்பொழுது...?"

"அது வேறு. இது வேறு. அது ஆச்சாரம். இது ஆசை. ஆசைக்கு எதுவும் குறுக்கிடாது. வான்னா வந்துதானாகணும்"

மருதாயி அச்சத்தாலும், தனியாக அகப்பட்டுக் கொண்டதாலும் வேறுவழியின்றி ஐயரின் 'ஆசை'க்குப் பலியானாள்.

ஐயருக்கு அந்தச் சமயத்தில் 'வேறுபாடு' எதுவுமில்லை. ஆனால் மருதாயிக்கு மாறுபாடுதான்!.

*  *  *

கருக்கொண்ட மேகத்தின் நிலையை அடைந்தாள் மருதாயி—ஆம்! சூல் கொண்டாள்.

ஐயரின் திருவருளால் ஐந்து மாதமாகி விட்டன. வாந்தியும், மயக்கமும் அடிக்கடி வலிந்து
தோன்றி வேதனை தந்த
வேதனையால் கஷ்டப் பட்டா
மருதாயி. சோற்றைக் க
ணால் கண்டு பத்து நாட்க
ளாகின்றன.

மாயாண்டி நிலைமை அ
தான்.

"மருதாயி! ஏனம்மா ஒ
மாதிரியா யிருக்கிறே? உட
புக்கு என்ன? முகமெல்லா
வெளுத்திருக்கே?"

"ஒண்ணுமில்லே அப்ப
வயிற்றை வலிக்குது"

இப்படியாக நொண்டிச் ச
கெல்லாம் சொல்லி மாயா
டியை ஏமாற்றிவிட்டாள்.

அடுத்த நாள்—

பண்ணை முதலாளியிடம் ஓ
டினாள், வேதனையோடு.

"சாமி! இப்படியாகி வி
ட்டது. கொஞ்சங் கவ
யுங்கோ!" என்று கெஞ்
கூத்தாடிக் கேட்டுப் பார்த்தா

ஐயர் ஒன்றுக்கும் அசை
வில்லே.

"எப்படியோ கெட்டுவி
என்னிடமா சரணாகதி அ
கிறாய்—? நீ பறப்புள்ளே—நா
பிராம்மணன். சீச்சீ! போ
—என்று கூறி விரட்டி விட்டா
வேறொன்று மறியாது வீட்
அடைந்தாள்

அலர் பரவிவிட்டது,
முழுதும், விஷயத்தைச் செ
வித்தீர வேண்டிய கட்ட
நெருங்கிவிட்டது. பயந்
பயந்து தந்தையிடமும் கூ
விட்டாள்.

மாயாண்டி சீறினான்.
மான் என்ற எண்ணம் மாறிவி
ட்டது. பார்த்தான். கையி
இருந்த ஆயுதம் கத்தி ஒன்
தான்! அது அவனுக்குத் து
வன்—கடைசி ஆயுதமுங்கூட.

புறப்பட்டான் பண்ணை மு
லாளியிடம், மகளைக் கெடுத்

(12-ம் பக்கம் பார்க்க)




## ...னுசியார் கோபம்

கோபம் ஒரு பொல்லாத
ாதி என்பது எல்லாருக்கும்
ரிந்ததுதான். கோபம் வந்து
ட்டால் நல்லறிவும் நிதான
ந்தியும் படைத்த சிறந்த அறி
ளிகளும்கூட வழி தவறி
ந்து கொள்வதும் முறை தவ
பேசிவிடுவதும் இயற்கை
ன். கோபமும் கொதிப்பும்
ள்ளத்தில் அலைமோதுகிற
ாது "இன்னதுதான் செய்கி
றும்—இதைத்தான் பேசுகி
றும்" என்பதின்றி கண்ட
தப் பேசிவிடுவதும் கருத்தின்றி
ரிய மாற்றுவதும் அடிக்கடி
லரிடமும் நாம் கண்டுவரும்
ழக்க வழக்கங்கள் தான், ஆனால்
ல்வி அமைச்சர் அவினுசிலிங்க
ர்க்கு வந்துள்ள கோபமோ
ம் இதுவரையில் எங்கும்
ணுத காட்சியாயும் கேளாத
ழ்ச்சியாயும் இருக்கிறது.
சன்ற கிழமை ஆலந்தூரில்
மிழ்க் கழக ஆண்டுவிழா ஒன்று
டைபெற்றது—அவினுசியார்
லைமையில். அங்கே பொதுமக்க
ருக்குக் "காலிகள்" என்ற அரு
மத் திருமாமம் சூட்டினுர்
மைச்சர். காரணம் என்ன
தரியுமோ? தமிழர்கள் கம்பன்
ட்டிய இராமனைப்போல் வீரர்
ாய் விளங்க வேண்டும் என்று
மைச்சர் கூறினுர் தன் தலைமை
ரையில். அது கேட்ட மக்கள்
றினர், வீர வாலியை வஞ்சத்
ால் மறைந்திருந்து கொன்ற
ராமன் ஒரு வீரன் அல்லன்—

அத்தகைய வீரம் தமிழர்க்குத் தேவையுமில்லை என்று! இது தான் நடந்தது. இதற்குத்தான். கோபம் அமைச்சருக்கு. இராமன் ஒரு வீரன்தான் என்பதை விளக்கி யிருக்கலாம் தக்க ஆதாரங்களோடு. வாலியை மறைந்திருந்து கொன்றது நியாயமே என்பதை நிரூபித்திருக்கலாம், அது முடியுமானுல்; நான் நினைக்கும் இராமன் வேறு—அவன் வாலிவதம் செய்யாதவன் என்று சொல்லி இருக்கலாம் காந்தியார் காட்டிய வழியைக் கடைப் பிடிப்பதானுல்! நேரிய வழியில் மாறுபாடான கருத்துக்களைக் கொட்டிக் குவித்து பரிமாறிக் கொண்டிருக்கலாம். இவற்றில் ஏதேனும் ஒரு வழியைப் பின் பற்றியிருக்கலாம்; இவற்றில் எதுவும் விருப்பமில்லையானுல், "என் கருத்து என்னேடு—உங்கள் எண்ணம் உங்களோடு. நான் சொல்வது உங்களுக்குப் பிடித்தமானுல் ஏற்றுக் கொள்ளுங்கள்! இல்லையானுல் தள்ளி விடுங்கள்" என்று வெளிப்படையாகவே சொல்லி இருக்கலாம். இது தான் முறை. ஆனுல் அமைச்சரோ இந்த முறையைப் பின் பற்றவில்லை. கோபத்தைக் கொப்பளித்தார் — ஐயவினு எழுப்பிய மக்களைக் குண்டர்கள் என்று இழித்துரைத்தார்.

"ஆராய்ச்சி பெருக வேண்டும்; அறிவு வளர வேண்டும்; அச்சமற்ற வீர வாழ்க்கை தமிழர்பால் நிலவவேண்டும்—செந்தமிழர் கூட்டம் நெஞ்சு நிமிர்ந்து நடக்க வேண்டும்—யாருக்கும் தலை வணங்காத வீறு விளங்கவேண்டும்" என்றெல்லாம் பேசுகிறுரே அவினுசியார், உயர்ந்த இலட்சியங்களை எடுத்துச் சொல்கிறுரே, சிறந்த தத்துவங்களைப் பரிசளிக்கிறுரே மக்களுக்கு, அதெல்லாம் என்ன "வெறும் வேதாந்தம்" தானு? இல்லையென்றுல் ஆராய்ச்சி வேண்டும் என்று ஓயாது பேசுகிற அவினுசியார் ஆராய்ச்சியின் விளைவான ஐயப்பாடுகளை மக்கள் எழுப்பியதும் வேல் பாய்ந்த வேங்கையெனச் சீறுவானேன்? குமுறும் எரிமலையெனக் கொந்தளிப்பானேன்? என்ன தான் காரணம் அவருடைய கோபத்திற்கு?

### இரண்டும் தவறு!

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சித் துறைத் தலைவர் திருவாளர் (இல்லை இல்லை ஸ்ரீமான் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள், நீண்ட ஆராய்ச்சியின் பயனுக இரண்டு பெரிய உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கிறுர். ஒன்று, இந்தியாவை விட்டுத் தமிழ்நாடு தனித்திருக்க முடியாதென்பது. மற்றொன்று வடசொற்களை விலக்கி விட்டுத் தமிழ்மொழி தனித்து வாழ முடியாதென்பது. 15-8-47-ல் வெளியான தினமணி சுதந்தர மலரில் இந்த உண்மைகளை உரைக்கிறுர் வையாபுரியார். ஐயமில்லை, இந்த ஆண்டின் கோபல் பரிசு வையாபுரியார்க்குத் தான்.

### அரிசி வருகிறது!

கஞ்சி வாதப்பா என்றுனும் பஞ்சத்து ஆண்டி, காஞ்சிபுரத்து வரதராஜப் பெருமாளை நினைத்து: எங்கேயப்பா, ஆண்டியப்பா எனக்கும் கொஞ்சம் கொடப்பா என்றுனும் பரம்பரை ஆண்டி, கஞ்சிதான் வருகிறது என்று எண்ணிக்கொண்டு. அந்த ஆண்

(11-ம் பக்கம் பார்க்க)

வர்ணாசிரமத்தின் பக்தர்கள், அதை மிகவும் போற்றுகிறார்கள். ராவ்பகதூர் போன்ற ராஜபக்தர்கள், பிரிட்டிஷ் ஆட்சியை மிகவும் புகழ்ந்து பேசுகிறார்கள். இந்தப் புகழுரைகளைக் கேட்டால், எனக்கு எரிச்சல் வருகிறது. வர்ணாசிரமம், நம்மவர்களின் வாழ்க்கையை அலங்கோலமாக்கிப் பாழாக்கியதாக, நான் முடிவுக்கு வந்திருக்கிறேன். வ. ரா.

போர்வாள்

13—9—47 சனிக்கிழமை

# பஞ்சாபிகள் வருகிறார்கள்!

ஆம்! பத்தாயிரம் பஞ்சாபியர்கள் திராவிட நாட்டிற்கு வருகிறார்கள்.

பாஞ்சாலம் கொலைக்களக் காதை வாசிக்கிறது. திராவிடம் இருக்கிறது அமைதிபுரி—அங்குச் செல்வோம் வாழ்வோம் என்று வருகிறார்கள்.

ஊருக்கு ஊர் மரணப் படுகுழி, வீட்டிற்கு வீடு சாக்காடு, நாடெங்கும் "பயங்கர தேவதை"யின் கோரத் தாண்டவம். பார்க்கும் முகங்களிலெல்லாம் அச்சம். ஒருவரை ஒருவர் பார்க்கும்போது, "எவனோ! இவன் எவனோ! எதிரியோ! எத்தனோ! உயிரைக் குடிக்கும் கொலைஞனோ! இல்லை, நம்மைத் தாக்கவந்த குண்டனோ! அல்லது மாற்றுச் சமூகத்தின் ஒற்றனோ" என்ற திகில் உள்ளத்தில்! எங்கும் ஐயம் நிறைந்த பார்வை. எதிர் பாராத இடத்திலிருந்தெல்லாம் திடீர்த் தாக்குதல். இது பாஞ்சாலம்—இந்தப் பாஞ்சாலத்திலிருந்துதான் பத்தாயிரவர் சென்னை வருகின்றனர்.

கொலை கொள்ளை இவ்விரண்டும் வெறும் வாசகங்கள் நமக்கு! ஆனால் இவை கொடுமை நிறைந்த கூரிய ஈட்டி முனைகள் பஞ்சாபியர்க்கு. ஆகவேதான் இந்த வாசகங்கள் உலவாத இடத்திற்கு—சென்னை மாகாணத்திற்கு அவர்கள் வருகிறார்கள்.

அவர்கள் நாடு சுடுகாடாயிருக்கிறது. அங்கு வாழ வழியில்லை. உயிருடன் உலவ மார்க்கமில்லை. காலை மலர்ந்தது மாந்தரெல்லாம் தங்கள் கண் மலர்ந்தே நட

மாடுகின்றார் என்று சொ
லவோ முடியவில்லை
வீட்டை விட்டுச் சென்றவ
திரும்பி வருவார் வீட்டிற்
என்றுரைப்பதற்கே
உறுதி இல்லை. ஆன
போனவர் போனவ
என்ற வேதனைக் குரல் ம
டும் அடுத்தடுத்து, ப
இடங்களிலும் எழுகிற
மகனை இழந்த தாயி
குரல், காதலனைப் பிரி
காதலியின் சோகம், ந
பனை இழந்த தோழர்களி
துக்கம், பெற்றோரை
காணாத பிள்ளைகளின் ப
தாபம், ஆதரவு அறியா
அனாதைகளின் விம்ம
இவற்றையும் இவை
போன்ற உள்ளம் உ
கும் சேதிகளையும் தா
பாஞ்சாலத்தில் காண மு
யுமே தவிர, அழகு ஆனந்த
சாந்தம் சமாதானம் கே
க்கை கொண்டாட்டம் க
ப்பு முதலியவற்றை யெ
லாம் அங்குக் காணமு
யாது. மயானபுரி அ
அந்த மயானபுரியிலிருந்
தான் பஞ்சாபியர் இ
வருகிறார்கள்.

நமது இரங்கல் உ
அவர்களுக்கு. துக்கபுரி
உலவி துயர்க்கடலிற் ப
ந்து, ஓமந்தூரார் ஆத
எனும் மரக்கலமேறி செ
னைக் கரைசேரும் அ
களுக்கு நாம் ஆறுதல் கூ
கிறோம்—மனிதப் பண்
அதுவாகலின்.

உள்ளம் ஒடிந்து கிடக்
அவர்களுக்கு அன்பு கா
வேண்டியது நம் கட
நம் திராவிடத் தோழர்
வெள்ளத்திலும் புயலி
சிக்கிச் சீரழிந்த காலத்
பஞ்சாபியரோ, வேறு
நாட்டவரோ நமக்குத் து

ந்தனரில்லை என்ருலும்
க ற் ற அவர்களுக்கு
ன்று நாம் துணை புரிய
ம்புகிறேம். இத் துறை
முனைந்து நின்று அவர்
க்கு நலம் செய்ய முன்
த முதலமைச்சர்
ந்தூர் இராமசாமியாரை
நாம் பாராட்டுகிறேம்.
வரை வாழ்த்தவும் விழை
ரும்.

ஞ்சாபிகள் வரட்டும்.
கள் புண்பட்ட உள்ளத்
கு ஆறுதல் பெறட்டும்.
ரவிடப் பண்பாட்டின்
ர்வையும் சிறப்பையும்
ணரட்டும். ஒரே இனத்த
என்ற பாசக் கயிற்றல்
ணக்கப்பட்டு, ஒரு குடும்
தவர்போல், அன்புள்ள
ண்ணன் தம்பியர்போல்,
ஞ்சு கலந்து உறவாடும்
ர் நண்பர்கள் போல்
ஸ்லாமியரும் இந்துக்கள்
று தவருக அழைக்கப்
ம் திராவிடரும் இங்கு
ம் விட்டுப் பழகி வாழும்
றையைக் காணட்டும்.
ம் பெறட்டும்.

ஆனல் ஒன்று. திராவி
தில் ஏற்கெனவே வீட்டு
ருக்கடி பொறுக்க முடி
த அளவிற்குவளர்ந்திருக்
து. நம்மிடம் உள்ள
னவின் இருப்பை நினைத்
லோ உள்ளம் வேதனைக்
மாகும் —அவ்வளவு
றைவு நம் நாட்டு அரிசி
நப்பு. நாம் உடுக்கும்
டையோ ஆண்டு ஒன்றுக்
பத்து முழம் என்ற
தாப அளவு. உண்ண
ணவு, உடுக்க உடை,
க்க இல்லம் இந்த
ன்றும் மனிதன் என்ற
ர்வகைக்கு மிக மிகத்
தவையான மூலப்
ருள்கள். இந்த மூன்றும் திருப்தி தரத்தக்க நிலையில் இல்லை திராவிடத்தில். எனவே நம் உள்ளம் எவ்வளவுதான் விரும்பினுலும் நம் நிலை சிறிதும் இடம் கொடுக்காது பத்தாயிரம் பஞ்சாபியர்களை நீண்ட நாட்களுக்கு இங்கு வைத்துக் காப்பாற்ற. ஆகவே அவர்கள் வருவதும் போவதும் குறுகிய கால ஏற்பாடாக இருக்க வேண்டுமே தவிர நீண்ட காலத் திட்டமாக இருத்தல் ஆகாது. பஞ்சாப் நிலைமை சற்றே சீர்பட்டதும் அவர்கள் தம் நாடு திரும்பிவிட வேண்டும். முதலமைச்சர் ஓமந்தூரார் இந்த உறுதிமொழியை இங்கு வரும் பஞ்சாபியர் ஒவ்வொருவரிடமும் கையொப்பமிட்டுப் பெற்றே ஆக வேண்டும். டில்லி அரசியலார்க்கும் இதை ஒளிவு மறைவின்றி அவர் உணர்த்தி விட வேண்டும். இதில் அவர் கொஞ்சமும் தயவோ தாட்சண்ணியமோ தயக்கமோ மயக்கமோ கொள்ளக் கூடாது; கொள்வது திராவிட இனத்தவரின் எதிர் காலத்தை மேலும் மேலும் இடர் நிறைந்ததாக மாற்றும் செயலாகவே முடியும்.

பஞ்சாபிகள் போகிற இடத்திலெல்லாம் ஆபத்தைத் துணைக்கு அழைத்துக்கொண்டே போகிறர்கள் என்ருேர் பழிச்சொல் இருக்கிறது. ஹிந்துஸ்தான் தலை நகரான டில்லியிலும் இன்று நவகாலியும் திப்பேராவும் நடமாடத் தொடங்கி விட்டனவே, இதற்கொரு முதன்மையான காரணம் பஞ்சாப் அகதிகள் அங்குக் குடியேறி இருப்பதே என்றும் சொல்லப்படுகிறது அண்மையில் டில்லியில் காந்தியார் பேசியுள்ள பேச்சும் இந்த ஐயப்பாட்டை உறுதிப்படுத்தும் தன்மையிலேயே அமைந்துள்ளது. பஞ்சாபியர் வருகையினல் அமைதி நிலவும் திராவிடத்தில் அமளி நுழைய நேரிடலாம். அது ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும் அரசியலார். அதற்குள்ள ஒரே வழி பஞ்சாபியரை ஊரின் இடை இடையே குடியேற விடாமல் தனி இடங்களில் வைத்திருந்து பாஞ்சால நிலைமை ஒழுங்கானதும் அவர்களை அவர்களுடைய நாட்டிற்குத் திருப்பி அனுப்பி விடுவதே.

பஞ்சாபியர் வாணிபம் கொழிக்கும் இடங்களில் தங்கித் தொழில் செய்ய விரும்பினுல் அதற்கேற்ற வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று சென்னைக் கலெக்டருக்கு அரசியலார் தாக்கீது பிறப்பித்துள்ளதாக சென்னைத் தினசரி ஒன்று கூறுகிறது. இது உண்மையானல் வன்மையாகக் கண்டிக்கப் படத்தக்கது. முன்னமே வடநாட்டு வணிக வேந்தர்களின் பொருளாதார வலையில் சிக்குண்டு சிதைவுறும் திராவிடம் இனியும் சீரழிய நாம் வழி கோலுவதா? மார்வாடிகளும் குஜராத்திகளும் மூல்தானிகளும் இவரனைய பிறரும் இங்கு வந்து வந்து தம் கடை விரித்து நம் பொருளைச் சுரண்டியது போதாதா? இனி, பஞ்சாபியரும் இங்கு நிலைத்து நின்று வணிகஞ் செய்து வாழ்வதாயின் அது திரா

விடத்தின் சீரழிவு என்ற புத்தகத்திற்குப் புதியதோர் அத்தியாயம் எழுதுவதாக அல்லவோ முடியும்? இது ஓமந்தூரார்க்குத் தெரியாதா? தெரிந்தும் இந்த ஏற்பாட்டிற்கு அவர் இசைகிறாரா? அவருடைய உள்ளம் ஒப்பிற்ற இக்கேட்டை? தென்னாட்டில் திக்கெட்டும் திராவிடப் பிரிவினை முரசு கொட்டப்படும் இந்நாளிலுமா இது நடப்பது? அதிலும் ஓமந்தூராரா இதைச் செய்வது? நடந்ததை அறிந்து இனி நடக்க இருப்பதையும் உணர்ந்து கொண்டா இந்த ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்? உணவுப் பிரச்சினையிலும்கூட வடநாடு தென்னாட்டிற்குத் துணைபோக மறுக்கிறது என்பதை டில்லியில் கண்ணாரக் கண்டு, வரும் வழியில் அதை மனதார உணர்ந்து, திருத்துறைப் பூண்டிக் கூட்டத்தில் அதை வாயார உரைத்த மதிப்பிற்குரிய நம் முதலமைச்சர் எப்படித் தான் இணங்கினாரோ பிற நாட்டார் நமைச் சுரண்டும் நிலைமை ஏற்பட! சிக்கறுக்க இயலாத பெரும்புதிர்களாக அல்லவோ உள்ளன ஈதெல்லாம்!

வரும் பஞ்சாபியர் நலிவு களைய ரூபா நூறாயிரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பது மற்றுமோர் செய்தி. ரூபா நூறாயிரம்! நாம் நலிவுற்றால் ரூபா நூறும் தரமாட்டார்கள் விந்தியத்திற்கு அப்புறம் உள்ளவர்கள் என்றாலும் இத்தொகை தருவதை நாம் குறை கூறவில்லை. அகதிகட்குத் துணை புரிவதைத் தவறு என்று யாருஞ் சொல்லமாட்டார்கள். நூறு ஆயிரம் அல்ல, நூறு இலட்சம் வேண்டுமானாலும் தருவோம், மனமுவந்து தருவோம், அவர்களுடைய 'திக்குத் தெரியாத' நிலை தீரும் வரை தருவோம், மேலும் மேலும் தருவோம், சலிக்காது தருவோம், முணுமுணுப்போ சல சலப்போ சற்றேனும் இன்றி மகிழ்ச்சியுடனே தருவோம், தருவதற்கு அட்டியில்லை, ஆனால் அவர்களுடைய ஆதிக்கம் மட்டும் இங்கு ஏற்படக் கூடாது. தப்பித் தவறியும் ஏற்படக்கூடாது. அரசியலோ சமுதாயத் துறையோ பொருளாதாரமோ எதிலும் அதிகார பீடம் அவர்களிடம் செல்லக் கூடாது. ஆணை பிறப்பிக்கும் கரம், ஏவல்விடும் குரல் இந்த நாட்டில் இந்த நாட்டவரிடம் இருக்க வேண்டுமே தவிர வேற்று நாட்டாரிடம் எக் காரணத்தை முன்னிட்டும் இருத்தல் கூடாது.


## போர்வாள்

### பெரியார் மலர்

4—10—47-ல்

**சிறந்த கதைகள் கவிதைகள் கட்டுரைகளுடன் வெளிவரும்.**

விலை அணு **5.**

விற்பனையாளர்கள் தேவையான படிகளுக்கு உடனே தெரிவிக்க.


திராவிட நாட்டு வரலாற்றில், ஒண்ட வந்த இனத்தவர் ஊர்க் குருமார் ஆன கதைகள் ஏராளம். ஆளடி

மைகளாய் நுழைந்து ஆ
வந்தார்களாக உருமா
வர்கள் எத்தனையோ பே
நம் மொழியைக் கற்
பயனடைந்தாலும் "எ
மொழியே தேவ மொழி
நம் தமிழும் எம் அ
தியர் தந்ததே" என்
இறுமாந்து கூறிய எத்
கூட்டமும் கொ
மல்ல. தங்க நிழல் கே
வர்கள் நாட்டுச் சொந்
காரர்களை விரட்டிய
தரு நிகழ்ச்சிகள் பல நூ
ஆமாம், மருந்தே ஆயி
விருந்தோடு உண் என்
பேசிப் பேசி வந்தவ
கெல்லாம் விருந்தளி
நொந்து போன வரலா
நம்முடையது. என்று
பஞ்சாபியர் துயர் க
நாம் தயார், ஏக்கத்
தாக்குண்டார்க்கு—அ
எந் நாட்டாராயினும், எ
மதத்தவரே ஆயினும்,
பகைவராயினும் சரியே
கை கொடுப்பது திராவி
பண்பு. எனவே கைகொ
போம், அவர்தம் அ
போக்குவோம், சா
வாழ்வு வாழ அவர்க
வழி காட்டுவோம் ஆ
அவர்கள் ஆதிக்கம் ஏ
மாயின் அதை மட்டும்
சகிக்க முடியாது.

பஞ்சாபிகள் வருகி
கள்.

வரட்டும்; தங்கட்டும்;
ஆறுதல் பெறட்டும்;
நேர் பட்டதும் திரும்
செல்லட்டும்.

**ஆனால்,**

ஆதிக்க எண்ணம் ம
வேண்டாம்.

# புனை பெயர்களின் மர்மம்

[நெ. இராஜரத்தினம்]

ம் நாட்டில் தொன்று தொட்டு
ளவோ புகழ்சான்ற நூல்
வழங்கி வந்திருக்கின்றன.
வு நூல்களும், சமய நூல்
ம், மருத்துவ நூல்களும்,
னபிற நூல்களும் ஏராளமாக
தப்பட்டு மக்களால் படித்து
படுகின்றன. அந்த நூல்களை
கியோர்களும் தங்கள் பெயர்
த் தயங்காது வெளியிட்டிருக்
றனர். வாதாடக் கூடிய நிலை
உள்ள பல சமய நூல்களையும்
அரசர்களால் விரும்பப்படாத
ளையும் எழுதினவர்கள் கூட
ளுடைய பெயர்களை வெளி
ஒரு சிறிதும் அஞ்சவில்லை.

ப்பேர்ப்பட்ட நூல்களைப்
து, ஆராய்ந்து, அனுபவித்த
இன்று பத்திரிகை யுலகில்
ன காண்கிறோம்? பெரும்
மையாக வெளியாகும் கட்
களிலும், கதைகளிலும், சமூக
ருத்தமான பிரச்சினைகளைப்
விரிவுற எழுதப்படுபவற்றி
எழுத்தாளர்கள் தங்களது
மைப் பெயர்களையா உரைக்
கள்? இல்லையே! புனைபெயர்
முகமூடிக்குள் அல்லவோ
சி தருகிறார்கள்! உண்மைப்
ர்களை உரைக்க அவர்களுக்கு
அச்சம்.

ட்சிகரமான கருத்துக்
யா அல்லது மனப்பான்மை
ண்டவை பற்றியோ
ம் பொழுதாவது தங்களு
பெயர்களைக் குறிப்பிட
அஞ்சலாம். கேவலம் ஒரு
சப்பற்ற காதற்கதை அல்
சோபைக்கதை எழுதும்
துகூட அவர்கள் தங்கள்
ர்களைக் குறிப்பிடுகிறதில்லை
ல் என்னே அவர்கள் வீரத்
!

யடகளின்மீது ஏறி தைரிய
தங்களுடைய கருத்துக்களை
ரம் செய்யும் புரட்சி மனப்
மை கொண்ட சீர்திருத்தக்
கள் அதே கருத்துக்களை கட்
ள் மூலம் வெளியிடும்
துமட்டும் தங்களது பெயர்
கூறவா பயப்படுவார்கள்?

கட்டுரைகளில் தங்களது பெயர்களைப் போடுவதற்கு அவர்களுக்கு அச்சமிருக்கும் என்று நம்புவதற்கில்லை.

அப்படிஇருக்க "கமா சோமா" என்று சில்லரைக் கதைகள் எழுதுபவர்கள்கூட தங்கள் பெயர்களைக் கூற ஏன் கூசவேண்டும். மேடையில் உண்மைப் பெயருடனும், பத்திரிகைகளில் புனை பெயருடனும் இரட்டையர்களாகக் காட்சியளிப்பதில் ஏதோ மர்மம் இருக்கிறது.

மர்மம் என்ன. எல்லாம் பித்தலாட்டம்தான்.

முதன் முதலில் பத்திரிகைத் தொழில் ஆரம்பிக்கும் பொழுது இப்பொழுது இருப்பதுபோல எண்ணிறந்த எழுத்தாளர்கள் இல்லை. பத்திரிகை ஆசிரியருக்கே பத்திரிகையை முழுவதும் நிரப்ப நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. தன்னுடைய பெயரினால் பத்திரிகையில் பல விஷயங்களைப் புகுத்தினால் வாசகர்கள் வெறுப்பார்கள் என்று பயந்து, பலப்பல புனை பெயர்களைப் புனைந்து கொண்டு அவர்கள் தங்களுடைய பத்திரிகைகளில் காட்சியளித்தார்கள். அப்பொழுது பெரும்பான்மையாக, பத்திரிகை படிப்பவர்களுக்கு இந்த சூழ்ச்சி தெரியாதிருந்தது. பல விஷயங்கள் பல புனை பெயர்களால் பத்திரிகைகளில் வெளிவந்ததைப் பார்த்து, "அடேயப்பா! இந்த பத்திரிகைக்கு விஷய தானம் செய்ய இவ்வளவு பேர்கள் இருக்கிறார்களா" என்று வியந்தார்கள். இப்படி மகள் வியப்பில் மயங்கி உண்மை தெரியாமல் இருக்கும் நிலையில் பத்திரிகைக்காரர்கள் முன்பு கடைப்பிடித்த பித்தலாட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இன்னும் மக்களை ஏமாற்ற சில எழுத்தாளர்கள் பெண்கள் பெயரை 'ஸ்ரீவா" தாரமாகத் தாங்கிக் கொண்டு எழுதுகிறார்கள். என்னே இவர்களது பேதமை! பெண்கள் பெயர்களை இவர்கள் கொண்டது. தாங்கள் எழுதியவைகளை, "என்னதான் இந்தப் பெண் எழுதியிருக்கிறாள். படித்துப் பார்ப்போம்" என்று மக்களை நினைக்கச் செய்யவா? இது ஏமாற்று வித்தையாகாதா?

ஒரு பத்திரிகையின் ஆசிரியராக இருக்கும் ஒருவர் தனக்குப் புனை பெயராக ஒரு பெண்ணின் பெயரைப் புனைந்துகொண்டு பலதொடர் கதைகள் எழுதி வருகிறார். ஒரு சமயத்தில் தொடர்ச்சியாக இரண்டு மூன்று இதழ்களில் அவருடைய தொடர் கதை வராமல் நின்றுவிட்டது. அதற்கு அந்த ஆசிரியர் சமாதானம் கூறும்பொழுது அவர்தாங்கிய பெண் புனைப்பெயர் எழுத்தாளருக்கு உடம்பு நோயுற்றதால் தொடர்கதை எழுத முடியவில்லை என்று தன் பத்திரிகையில் அறிவித்தார். அதாவது தான்வேறு அந்தத் தொடர்கதை எழுதுபவர் வேறு என்று வாசகர்கள் உணர எண்ணிச் செய்ததாகும். தனக்கு ஏற்பட்ட சிறிது அசௌகரியத்தினால்தான் தொடர் கதை எழுத முடியவில்லையென்று ஒளிவுமறைவு இல்லாமல் கூறத்தயக்கமேன்? அதுதான் தெரியவில்லை.

சமீபத்தில் எனக்குச் சிறிது ஓய்வு இருந்தபொழுது ஒரு பிரபல பத்திரிகையின் பிரதிகள் பலவற்றை எடுத்து தொடர்ச்சியாகப் படித்து வந்தேன். ஒரு பிரதியில் "ஸோமாஸ்" என்ற புனைபெயர் தாங்கிய ஒருவரின் கதையைக் கண்டேன் மற்றொரு பிரதியில் "ஸ்கந்தன்" என்ற புனைபெயரில் ஒரு கதை இருந்தது. இன்னுமொரு பிரதியில் மேற்சொன்ன இருவர்களும் சேர்ந்து இந்தக் கதையை எழுதினார்களோ என்று ஐயுறும் வண்ணம் "ஸோமாஸ் கந்தன்" என்ற புனை பெயரில் ஒருகதை எழுதப்பட்டிருந்தது. இவர்கள் மூவரும் பலவேறு கதைகளை பலவேறு பெயர்களால் எழுதி, படிப்பவர்களுக்கு மூன்று வெவ்வேறு எழுத்தாளர்கள் என்று தோன்றச் செய்தாலும் இந்த மூவ

ரும் ஒருவரே என்று எனக்குப் பின்னர் தெரியவந்தது.

இன்னொரு எழுத்தாளர் இருக்கிறார். அவர் என் நண்பர். அவருக்கு அவர் பெற்றோர்கள் இட்ட பெயர் அதிகமாகப் பிடிக்கவில்லை போலிருக்கிறது "டைரிகீபர்" "லிப்ஸ்டிக்", "கிண்டதாசன்" "குளவி" "ஸ்டுடியோ ஸ்பை" என்ற பல புனைபெயர்களில் எழுதி வருகிறார். இன்னும் எனக்குத் தெரியாத எவ்வளவு புனைபெயர்களை அவர் கையாண்டிருக்கிறாரோ அவரைப்படைத்த "ஆண்டவனுக்கு" த்தான் இது வெளிச்சம்!

பல கதைகள் அடங்கிய ஒரு புத்தகத்தை நான் சமீபத்தில் பார்க்க நேர்ந்தது, புத்தகத்தின் முகப்பிலே ஆசிரியர்பெயர் காணாமல் ஏதோ ஒரு புனைபெயரே பொறிக்கப்பட்டிருந்தது. அதோடு விட்டிருந்தால் நான் அந்த ஆசிரியரை இங்கு அம்பலத்திற்குக் கொண்டுவர நேர்ந்திராது. அந்தக் கதைகளுக்கு **அவரே** தனது மற்றொரு புனைபெயரில் முன்னுரை எழுதிவிட்டார். அதோடுவிட்டாரா? முன்னுரை எழுதியவருக்குத் தன் புத்தகத்தைச் சமர்ப்பணம் செய்வதாக வேறு எழுதி இருக்கிறார். அதை அவர் சாமர்த்திய மாகத் தான் செய்திருக்கிறார். "எனது ஆத்ம நேயருக்குச் சமர்ப்பணம்" என்று எழுதி இருக்கிறார். கதை எழுதியவரும், முன்னுரை எழுதியவரும், சமர்ப்பணம் செய்யப்பட்டவரும் ஒன்றாக இருக்கும் பொழுது தனது ஆத்ம நேயர் "என்று கூறாமல் வேறு என்ன கூறமுடியும்" இந்த மேதாவித் தனத்திற்கு என்ன சொல்லுகிறீர்கள்.

எழுத்துச் சுதந்திரம் வேண்டும் என்று கதறும் இவர்கள் ஏன் தங்களைப் புனைபெயர் போர்வையால் மறைத்துக் கொள்ளுகிறார்கள்? புனைபெயர்களை வைத்துக் கொண்டு செய்யும் புரட்டல்களும், பித்தலாட்டங்களும் உண்மைப் பெயர்களை வைத்துக்கொண்டு செய்யமுடியாது என்ற எண்ணத்தினாலா?

சில சிறந்த எழுத்தாளர்கள் தாங்கள் எழுதியவைகளை எல்லாம் அவர்களது பெயரிலேயே வெளியிடுவதை நாம் காண்கின்றோம். அதனால். அவர்களுக்கு 'என்ன இழுக்கு ஏற்பட்டு விட்டது, தன் சொந்தக் கருத்தை வெளியிடும் பொழுது புனைபெயர் என்ன வேண்டியிருக்கிறது.

ஒருவேளை தங்களுடைய பெயர்களைக் காட்டிலும் புனைந்துகொள்ளும் புனைபெயர் அழகாக இருக்கிறது என்று கருதுகிறார்களா?

அகிலன், துமிலன், வர்தன், வல்லிக்கண்ணன், கைலைக்கண்ணன், கரிச்சான் குஞ்சு, ஸ்ரீவை குஞ்சு, மாஜினி, குமுதினி, குகப்ரியை, மகரம், மாயாவி, மைக், மேதாவி, கல்கி, கதிர் கொனஷ்டை, கேசரி சுகி, சசி, சீவல், நாடோடி, நையாண்டி, பாரதி, பாசரசு, மகடி இதுபோன்ற பல புனைபெயர்களில் என்ன அழகிருக்கிறது. ஏதோ இவைகளைப் பார்க்கும்பொழுது

விநோதமாகவும், விசித்திரமாக
இருக்கிறதே ஒழிய அவசி
என்று எனக்குத் தோன்றவில்

இனிமேலாவது எழுத்தா
கள் தங்களை மறைத்துக்கொண்
ருக்கும் புனைபெயர் திரைக
விட்டு வெளியேவந்து தங்களுை
சுய உருவங்களோடு "பேனா"
தனம் புரியட்டும். இந்தப் பு
பெயர் மோகம் என்றும் "சி
சீவி" யாக இல்லாமல் சீக்கி
மறையவேண்டும்; வேண்ட
இந்த அர்த்தமில்லாத மோகம்.


**போர்வாள்**

திராவிடர் வார வெளியீ

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ரூபா | 0 1 |
| ஆண்டு 1-க்கு | " | 5 0 |

விவரங்களுக்கு:

போர் வாள்

147, பவழக்காரத் தெரு, சென்


# தமிழ்தானா?

உங்கள் பெயர் என்ன? தமிழ்தானா? அல்லது சடாகூஷர ... சஹஸ்ரநாமம் இப்படிப்பட்டதா?

உங்கள் வீட்டுப் பெயர் என்ன? தமிழ்தானா? அல்லது ஸ்ரீனிவாச பவன் ஷண்முக விலாஸ் பண்டரி மண்டல் இப்படிப்பட்டதா?

உங்கள் கடையின் பெயர் என்ன? தமிழ்தானா? அல்லது நியோ கோமள மந்திர், விக்னேஸ்வரர் கஜூர் ஜவுளி இத்தன்மையதா?

உங்கள் தெருவின் பெயர் என்ன? தமிழ்தானா? அல்லது அநந்த சயனம் ரோட்டு சந்நதி வீதி சென்ட்ரல் பஜார் இவை போன்றதா?

நீங்கள் உண்ணும் சிற்றுண்டியின் பெயர் என்ன? தமிழ்தானா? அல்லது மைசூர் போண்டா குல்குந்து ராமபாணம் காராசேவ் ஜாங்கிரி ஜிலேபி இவை போன்றதா?

**இவற்றில் எதுவேனும் தமிழ் இல்லை எனில் உடனே தமிழாக்குங்கள்.**

**தமிழ்மொழி சிறப்புற்றால்தான் தமிழ்நாடு சிறப்புறும்; தமிழ் வாழ்வு சிறப்புறும்.**

## நாடும் ஏடும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டியின் கதைபோல அரிசி வருகிறது என்றதும் எங்கே என்று தேடிக்கொண்டு "போர் வாள" நிலையத்திற்கு வந்துவிடாதீர்கள். இங்கே ஒன்றும் அரிசி கிடைபாது. இது என்ன விவசாயப் பண்ணையா அல்லது கள்ள மார்க்கெட் மிராசா, இங்கே அரிசி குவித்திருக்க. அமைச்சர்களுடைய சுற்றுப் பயணத்தின் விளைவாக சில ஆயிரம் டன் அரிசி மூட்டைகள் கிடைத்திருக்கின்றன அரசியலாருக்கு, அதைத்தான் நாம குறிப்பிட்டோம் அரிசி வருகிறது என்று. அமைச்சர்கள் அத்தனை பேரும் ஆளுக்கொரு மாவட்டமாகப் பிரித்துக்கொண்டு, ஊரூராய்ச் சென்று, நாட்டில் வரவிருக்கும் பஞ்சக் கொடுமையை எடுத்துச் சொல்லி கெஞ்சுவாரைக் கெஞ்சியும் மிரட்டுவாரை மிரட்டியும நெல் மூட்டைகள் சேர்த்திருக்கிறார்கள்! அதன் விளைவாக அக்டோபரில வரவிருந்த அரிசிப் பஞ்சம் ஒரளவிற்குத் தடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்களே நேரில் வந்து அச்சுறுத்தியதால் சில மிராசுதார்கள் பதுக்கி வைத்திருந்த நெல் மூட்டைகளில் சிலவற்றை எடுததுக் கொடுத்திருக்கிறார்கள் அரசியலாரிடம். —சும்மா அல்ல; விலைக்குத்தான் —அதுகூட பஞ்சத்தைத் தடுக்கும் "காருண்ய புத்தி"யுடன் அல்ல; தங்களிடம முடங்கிக் கிடக்கும் நெல் மூட்டைகளில் சிலவற்றைத் தாங்களே முன்வந்து சர்க்காரிடம் தந்து விட்டால் தங்கள் கிடங்கில் பதுங்கிக் கிடக்கும் ஏராளமான மற்ற மூட்டைகளை அரசியலார் தொடமாட்டார்கள் என்ற ராஜதந்திரத்தோடுதான்!

### அடையுங்கள் கூண்டில்!

இப்போதைக்கு நெல் கிடைத்துவிட்டது; ஆகவே நம் கடமை தீர்ந்து விட்டது என்று அமைச்சர் குழு கருதுமானால் அதைவிடப் பெருந் தவறு வேறு இருக்க முடியாது இப்போது கிடைததிருப்ப நெல்லாம் எட்டு அவுன்ஸ் பங்கீட்டிற்குப் போதுமான அரிசி மட்டில்தான் என்பதையும், மக்கள் வயிறார உண்டு நல் வாழ்வு வாழ வேண்டுமாயின் இப்போது கிடைத்துள்ள அரிசி போதவே போதாது என்பதையும், குறைந்த அளவு பதினறு அவுன்ஸ் அரிசியேனும் பங்கீட்டில் தரப்படவேண்டும் என்பதையும், அப்படியாயின் பெரும் பண்ணைகளில் கள்ள மார்க்கெட் வாணிபத்திற்கென்றே இன்னும் பதுக்கி வைக்கப்பட்டுள்ள ஏராளமான நெல் மூட்டைகளைப் பறிமுதல் செய்தே ஆக வேண்டும் என்பதையும் எல்லோரும் ஒப்புக்கொள்வர். மிராசுதார்கள் ஏதேனும் சூழ்ச்சி செய்து நெல் மூட்டைகள் மக்கள் மன்றத்திற்கு வாராத வண்ணம் தடைகளைத்துவாராயின் அவர்களைக் கூண்டில் அடைத்தேனும் மக்களுக்கு உணவளிக்க அரசியலார் முனைய வேண்டும். நேர்மையான வேண்டுகோள் விடுத்து ஊதியம் உயர வேண்டும் என்பதற்காக வேலை நிறுத்தம் செய்த உழவர்கள் மீதும் பக்கிங்காம் மில் தொழிலாளர்கள் மீதும் வீசப்பட்ட அடக்குமுறை பாணத்தை மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் நெஞ்சுத் துணிவுடைய கள்ள மார்க்கெட் கழுகுகளின்மீது வீசுதற்கு ஆட்சியினர் ஏன் தயங்க வேண்டும்? நாளைக்குப் பார்ப்போம் என்பதின்றி இன்றே அரசியலார் செய்து தீர வேண்டிய பணி இது, செய்வார்களா அரசாங்கத்தார்?

### வருத்தந் தருகிறதாம்!

"ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவாகள் என்பதற்காகத் தகுதியையும் திறமையையும் கூடப் பார்க்காமல் அறிவும் ஆற்றலும் படைத்தவர்களை அடக்கி அழுத்தி விடும் போக்கு துரதிர்ஷ்ட வசமாகச் சுதந்தர இந்தியாவிலும் காணப்படுகிறது. இன்றைய இந்தியாவில் இது ஒன்றுதான் வருத்தத்தை அளிப்பதாக இருக்கிறது."

யார் சொல்லி இருப்பார்கள் இது போல? சொல்லுங்கள் பார்க்கலாம்.

கவர்னர் ஆச்சாரியார் என்கிறீர்களா? இல்லை. அவருக்கேது நேரம் இது பற்றிச் சொல்ல? அவர்தான் "ஆபத்தும் கவலையும் பொறுப்பும்" நிறைந்த பதவி யேற்றுக் கொண்டு "சிக்கலான பல பிரச்சினை"களைத் தீர்ப்பதிலே தன் முழு கவனத்தையும் செலுத்தியிருக்கிறாரே!

திருவிதாங்கூரின் முன்னைய திவான் சசிவோத்தம சர். சி. பி. இராமசாமி அய்யராக இருக்கலாம் என்கிறீர்களா? இல்லை— இதுவும் தவறு. இலக்கிய தத்துவ வேதாந்த விசாரணைகளில் ஈடுபாடு கொண்டுவிட்ட சர் சி. பி. இந்தச் சர்வ சாமான்ய உலக விஷயத்தைப் பற்றியா பேசுவார்? இல்லை.

நாடெங்கும் பிராமண சபைகளை அமைத்து "ஸ்ரீமான்களே விழித்தெழுங்கள்" என்று தம் இனத்தவரைத் "தட்டி எழுப்பி" வந்தாரே திவான் பகதூர் ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்தான் சொல்லியிருப்பார் என்று சொல்கிறீர்களா? இல்லவே இல்லை. அவர் இப்போது அரசாங்க அலுவல் பார்க்கிறார் —வெறும் பிராமண சபை அலுவல் மட்டுமல்ல. அவர் அல்ல இதைச் சொன்னது.

மாஜி சர் கோபாலசாமி அய்யங்கார் அல்ல; முன்னைய "அட்வகேட் ஜெனரல்" அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அல்ல; "சீர்திருத்த எழுத்தாளர்" வ. ரா அல்ல; "கல்கி" இதழாசிரியர் அல்ல; ஆநந்த விகடன் பத்திரிகை அல்ல; "கலை மகள்"—கி. வா. ஜகநாதய்யருமல்ல.

தகுதியும் திறமையும் கவனிக்கப்படவில்லையே, குறிப்பிட்ட ஒரு சமூகத்தாரை அடக்குகின்றனரே, முன்னேற விடாது தடுத்து நிறுத்தி விடுகின்றனரே என்றெல்லாம் கூறி வருத்தப்பட்டது யார் என்று இன்னமும் தெரியவில்லையா? தெரியவே இல்லையா?

சொல்லி விடலாமா?

சிறந்த விஞ்ஞானி சர். சி. வி. இராமன்! ஆம்! அவர்தான்! உயர்ந்த அறிவாளி என்றாலும் இனப் பற்று அவரை அப்படிச் சொல்ல வைத்தது.

உலகம் புகழும் அறிவியற் கலைஞர் என்றாலும் "அந்த ஒரு குறிப்பிட்ட" சமூகத்திற் பிறந்த பாவம் அவ்வண்ணம் கூறச் செய்தது!

நிதி அமைச்சர் ஆர். கே. சண்முகமும் மைசூர் திவான் சர் இராமசாமியும் இனியே இ[illegible] பிறந்த இனத்திற்குப் பாடு [illegible] வார்கள் என்று எதிர் பார்[illegible] லாமா? இல்லை, ஊர்ப் பிள்ளைகளை ஊட்டி வளர்த்து விட்டு தன் பிள்ளைகளைச் சாகடிக்கும் மனப் போக்குடன் தான் இனியும் நடந்து கொள்ளப் போகிறார்களா?

---

கத்திக் குத்து

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மடையன் என்ற எண்ணத்துடன். ஐயரை அதட்டிக் கேட்டான்.

ஐயருக்கு அச்சமிருந்த போதிலும் பணத்திமிர், பயத்தைப் போக்கிற்று. கணக்கரை அழைத்தார். கசையடி கொடுக்க ஆணையிட்டார். கணக்கருக்குக் கைவலித்த பின்புதான் கசைக்கு ஓய்வு கிடைத்தது.

மாயாண்டியின் புண்பட்ட மனம் அடிபட்டவுடன் புலியை நிகர்த்தது. பாய்ந்தான். அவன் கையிலிருந்த கத்தி, ஐயர் மார்பை ஆழம் பார்த்து.

கறை படிந்த கத்தியுடன் ஓடினான். கண்ணில் பட்டாள் மருதாயி.

"ஏ, கழுதே! நீ நம்ம குடும்பத்துக்கே கெட்டபேரு உண்டாக்கிட்டே. நம்ம மானம் போச்சி, அதுக்குப் பொறகு உசிரை வச்சிக்கிட்டு இருக்கலாமா—? நீயும் அந்தப் 'பாவி' போன இடத்துக்கே போ!" என்று சொல்லிக்கொண்டே கத்தியிலிருந்த கறையை அவள் இரத்தத்தால் கழுவினான்.

மருதாயி இறந்தாள்.

மாயாண்டியின் வெறி நீங்கியது.

அப்பொழுதுதான் தான் 'கொலைகாரன்' என்பதை உணர்ந்தான்.

"இனி நான் உயிருடன் இருந்தால், போலீசாரால் கொலைத் தண்டனைதான் கிடைக்கும். அவர்கள் கையிலா நான் சாகவேண்டும்" இது மாயாண்டியின் இறுதியான உளக் குமுறல்—உள்ளக் குமுறலின் விளைவு—?

தன்னுடைய மார்பிலேயே மறைத்து வைத்து விட்டான், அந்தக் கத்தியை!.

---

## தோழர்கட்கு!

"போர்வாள்" இதழின் முதல் வீச்சு தேவையென்று ஏராளமான தோழர்கள் நேரிலும் கடிதம் மூலமாகவும் கேட்டவண்ணம் உள்ளனர். முதல்வீச்சு முற்றும் செலவாய்விட்டது. ஆதலின் இத்தகைய விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

அலுவலாளர்,
"போர்வாள்"


வெளிவந்து விட்டது!

திராவிடப் பண்ணை புதிய வெளியீடுகள்.

அறிஞர். சி. என். அண்ணாதுரை. எம். ஏ.

எழுதிய,

1. கம்பரசம் 1-8-0

2. கற்பனைச் சித்திரம் 1-0-0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி.

குறிப்பு :—தனிப்பிரதி வேண்டுவோர் புத்தக கிரயத்தோடு அணா 0-4-0 சேர்த்து மணியார்டர் அனுப்பவேண்டும்.


Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons.)